**20.03.2023. அ.வ.எண். 133/2015 வா.சா.1 – திருமதி. பூங்கோதை**

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு வயது 52. சண்முகம் எனது மாமனார் ஆவார். சண்முகத்திற்கு ஏழு பிள்ளைகள். ராஜேந்திரன், விஸ்வநாதன், மாணிக்கம், குணசேகரன், லெட்சுமி, இந்திரா, ஆறுமுகம் ஆகியோர் ஆவார்கள். எனது மாமனார் எனது திருமணத்திற்கு முன்பே இறந்து விட்டார். 40, 50 வருடங்கள் இருக்கும். 1ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரி. நானும், முக்காயியும் எந்த வருடம் திருமணம் செய்தோம் என்றால் தெரியாது. எனது கணவர் பெயர் விஸ்வநாதன். விஸ்வநாதனுக்கு இரு தாரம். மூத்த தாரம் 1ம் பிரதிவாதியின் தாய், நான் இளையதாரம். எனக்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது என்று என்னால் சொல்ல இயலாது. படிப்பறிவில்லாததால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு ஒரு பையன். பெயர் தங்கபாண்டிமதி. அவர் 2ம் வாதி. அவருக்கு வயது 24. மூக்காயிக்கு இரண்டு பெண்பிள்ளைகள். சண்முகவள்ளி, ராஜஜோதி ஆகியோர். மேற்படி நபர்கள் 2, 3 பிரதிவாதிகள். எனது சகோதரிக்கு இரண்டும் பெண்மக்களாக இருந்த காரணத்தினால், எனது சகோதரியின் சம்மதத்தில் பேரில் நான் திருமணம் செய்துகொண்டேன். எனது கணவர் விஸ்வநாதன் இறந்து ஒன்பது வருடங்கள் இருக்கும். வழக்கு சொத்துக்கள் பாகம் பிரிக்காமல் உள்ளது. விஸ்வநாதனுக்கு கூடப்பிறந்தவர்கள் மூன்று ஆண்மக்களும்,இந்திரா, குணசேகரன், ராசேந்திரன் ஆகியோர்கள் உயிருடன் உள்ளார்கள். அவர்களை இந்த வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்கவில்லை. விஸ்வநாதன் இறந்த சமயம் கருத்தன்பட்டியில் வசித்து வந்தார். அவர் கருத்தன்பட்டியில் வசித்தாலும், ஆவாத்தாரனபட்டியில் வீடுகள் , வயல்கள் உள்ளது. விஸ்வநாதன் சிங்கப்பூரில் ஐந்து வருடங்கள் இருந்தார். எந்தவருடத்திலிருந்து எந்தவருடம் வரை இருந்தார் என்று சொல்லமுடியாது. வா.சா.ஆ.2. கிரையபத்திர அசல் 4ம் பிரதிவாதியிடம் உள்ளது. மேற்படி கிரையபத்திரம் படித்து பார்த்து என்னால் சொல்ல இயலாது. மேற்படி பத்திரம் எனது மாமனார் எனது சகோதரி மூக்காயிக்கு 15.09.2008ம் தேதி எழுதிக்கொடுத்தார். வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள

புகைப்படம் சண்முகம் மற்றும் மூக்காயி ஆகியோரின் புகைப்படம்தான். கிரையத்திரத்தில் கண்ட சொத்து கருத்தன்பட்டி கிராமத்தில் உள்ளது. சர்வே நம்பர், நான்கு மால் விபரம் தெரியாது. மேற்படி கிரையப்பத்திரம் வாங்கப்பட்ட காலத்தில் நானும் உடன் இருந்தேன். அந்த கிரையம் வாங்குவதற்கு பணத்தை எனது கணவர்தான் கொடுத்தார். பணத்தை மொத்தமாக கொடுத்தார். மொத்தமாக கொடுத்து பத்திரம் போட்டார்கள். பத்திரத்தில் கண்ட இடம் தற்போது இரண்டு ஓட்டு வீடாக உள்ளது. அந்த வீட்டில்தான் நாங்கள் இருக்கிறோம். அந்த ஓட்டுவீடு சுமார் 14 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. மேற்படி ஓட்டுவீட்டிற்கு 4ம் பிரதிவாதி பெயரில் வரி ரசீது உள்ளது. மூக்காயிக்கு எழுத, படிக்க தெரியும். மூக்காயி கையெழுத்து போடுவார். வா.சா.ஆ.3ல் முதலாவது உள்ள நபர் லெட்சுமணன் என்ற நபரும், 2வது உள்ள புகைப்படம் மூக்காயின் புகைப்படமாகும். சாட்சி கையொப்பம் செய்துள்ள அர்ச்சுனன் என்னுடைய மாமா. அவரது அப்பா பெயர் அண்ணாமலை. 2வது சாட்சி லெட்சுமணன் மகன் சின்னையா அவரை தெரியும். வா.சா.ஆ.3ன் படி விவசாய இடத்தை கிரையம் கொடுத்தார்கள். ஆபதாரன்பட்டியில் உள்ள ஒரு வயல் 83 செண்டு. கருத்தன்பட்டியில் மனையிடம் 14 செண்ட். மேற்படி இரண்டு இடமும் தற்போது வரை 4ம் பிரதிவாதியின் பெயரில்உள்ளது. வா.சா.ஆ4. வங்கி கணக்கிற்கு எனது கணவர், எனது அக்கா மூக்காயிக்கு பணம் அனுப்பியுள்ளார். அதில் உள்ள புகைப்படம் 1ம் பிரதிவாதியின் படம். வா.சா.ஆ.4ன் படி அதில் கண்டுள்ள வரவு, செலவுகள் பற்றி யார் மூலமாவது தெரிந்து கொண்டேனா என்றால் 1ம் பிரதிவாதிக்குதான் அந்த வரவு, செலவுகள் பற்றி தெரியும். எனது கணவர் வெளிநாட்டில் இருக்கும் போது மாதம் ரூ. 50 ஆயிரம் வங்கி கணக்கிற்கு அனுப்புவார். நானும், 1ம் பிரதிவாதியும் விவசாய கூலிவேலை செய்வோம். அதில் வரக்கூடிய வருமானத்தை கொண்டு எங்களது குடும்ப செலவை செய்துகொள்வோம். எனது கணவர் அனுப்புகிற தொகையிலிருந்து கல்யாணம் மற்றும் இறப்பு காரியங்களுக்கு செலவிற்காக எடுத்துக்கொள்வோம். அனைத்து தொகையும் இந்த வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி என் அக்காதான் எடுத்துக்கொள்வார். நான்

சொல்லக்கூடிய தொகை 15.09.2008ல் எனது சகோதரிக்கு வங்கி கணக்கில் இருப்பில் இல்லை என்று சொன்னால் இந்த விபரங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்குதான் தெரியும். இந்த வழக்கில் எனது கணவரின் இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை. வாரிசு சான்றும் தாக்கல் செய்யவில்லை. ஒரு வீடு ஒட்டுவீடாகவும், மற்றொரு வீடு சுவர் கட்டாமல் தென்னம் கொட்டகை உள்ளது. இரண்டு வீடு கட்டுவது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எனது சகோதரியான 1ம் பிரதிவாதிக்குதான் தெரியும். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக பாக உரிமை உள்ளது என்று சட்ட அறிவிப்பை 4, 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பபட்டதாக என்றால் அனுப்பினோம். அவர்களும் எனக்கு பதிலறிப்பு அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பிய சட்ட அறிவிப்பு எங்களால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கு முறையான வகையில் 4, 5 பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பாத காரணத்தினால், எவ்வித எழுச்சிமூலமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கிடை சொத்து 4, 5 பிரதிவாதிகள் எதிர் கோரிக்கை கேட்டு அதற்கு நாங்கள் ஆட்சேபணை தெரிவித்துள்ளோம். தாவா சொத்தில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், 4, 5 பிரதிவாதிகளை அலைகழிப்பு செய்யும் முறையில் வழக்கினை தாக்கல் செய்து உரிமை உள்ளதாக பொய்யான வகையில் எதிர்வாதம் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தினை பொறுத்து 4ம் பிரதிவாதியின் மீது அல்லது அவரது கணவர் மீது காவல்துறையில் பாகம் வேண்டும் என்று புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.